

# ஆங்கிலத்தில் பரதம் கற்றுத் தரும் பத்மா சுப்பிரமணியத்தின் மாணவி



பாலா தேவி

'பரதநாட்டியத்துக்கு உருகார் ஒரு நாட்டியத்துக்கும் உருகார்...' என்று நெகிழ்கிறார் பாலா தேவி. பத்மா சுப்பிரமணியத்தின் மாணவியான இவர், அமெரிக்காவில் உள்ள பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் ஆர்டிஸ்டிக் இயக்குனராக பணிபுரிந்து வருகிறார்.

''அப்பாவும், அம்மாவும் கலைபிரியர்கள். குழந்தைகள் வாய்ப்பாட்டும், பரதநாட்டியமும் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைப்பவர்கள். அப்படிப்பட்டவர்கள் எனக்கு பெற்றோராக அமைந்தது நான் செய்த புண்ணியம். சிறுவயதிலிருந்தே எனக்கு நடனமாட பிடிக்கும். இதை அறிந்த என் பெற்றோர் பரதநாட்டிய பயிற்சியில் என்னை சேர்த்தார்கள். ஆறு வயதில் ஜெயலட்சுமி நாராயணனை குருவாக ஏற்று காலில் சலங்கை கட்ட ஆரம்பித்தேன். அதன் பிறகு பிரபல நாட்டிய கலைஞர் பத்மா சுப்பிரமணியத்திடம் முறையாக பரதம் பயின்றேன். அவர்தான் எனக்கு பரதம் என்ற கலையை நடனமாக மட்டும் கற்றுக் கொடுக்காமல் அதைப் பற்றி எப்படி ஆய்வு செய்ய வேண்டும் என்றும் சொல்லிக் கொடுத்தார்.

ஒருவகையில் ரத்தத்தை போல் பரதம் எனக்குள் ஊடுருவி இருக்கும் விஷயம் என்று சொல்லலாம். என்னால் அதைப் பற்றி சிந்திக்காமல் இருக்க முடியாது. அது ஒரு பெரிய கடல். உள்ளே செல்லச் செல்ல அதன் ஆழம் அதிகமாகிக் கொண்டே இருக்கும். அந்த ஆழத்தை தரிசிப்பதே சுகமான அனுபவம்தான். நாட்டியத்தை கற்றுக் கொண்டு ஆடினால் மட்டும் போதாது. ஒவ்வொரு அசைவு, பாவனை குறித்தும் அர்த்தத்துடன் தெரிந்து வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் அந்தக் கடலில் மூழ்கி முத்தெடுக்க முடியும்...'' என்று சிரித்த பாலா தேவி, அமெரிக்க வாழ்க்கை குறித்து விளக்க ஆரம்பித்தார்.

''என் கணவர் சந்திரசேகர் அமெரிக்காவில் சாஃப்ட்வேர் நிறுவனம் நடத்தி வருகிறார். அதனால் திருமணமானதும் அங்கு சென்றுவிட்டேன். ஓரளவு அமெரிக்கா பழகியதும் அங்குள்ளவர்களுக்கு பரதநாட்டியம் கற்றுக் கொடுக்க முடிவு செய்தேன். 'ஸ்ரீ பத்மா நிருத்ய அகடமி' என்ற பள்ளியை தொடங்கினேன்.

எங்கள் பள்ளியில் தமிழ்க் குழந்தைகள் மட்டுமல்ல, அமெரிக்க பிள்ளைகளும் பரதம் பயில்கிறார்கள். பரதத்தை ஆங்கிலத்தில் பாட முடியாது. ஆனால், அதை ஆங்கிலத்தில் புரிய வைக்க முடியும். எனவே பரதம் என்றால் என்ன என்பதை விளக்கிவிட்டு, அதிலுள்ள அசைவுகள், முத்திரைகள் ஆகியவற்றை அமெரிக்க குழந்தைகளுக்கு முதலில் ஆங்கிலத்தில் புரிய வைக்கிறோம். அதன் பிறகே நாட்டியப் பயிற்சியை தொடங்குகிறோம்.

எந்தவொரு விஷயத்தையும் புரிந்துக் கொண்டு செய்யும் போதுதான் முழு ஈடுபாட்டையும் காண்பிக்க முடியும். அதைத்தான் நாங்கள் இப்படி செய்கிறோம். சாதாரண நடன அசைவுகளுடன், ஒவ்வொரு நாட்டியத்தை பற்றியும் அவர்களுக்கு ஒரு சிறு குறிப்பு கொடுக்கிறோம். முகபாவங்கள் எப்படி காண்பிக்க வேண்டும்



என்பதை விளக்குகிறோம்...''

தமிழர்களோ, அமெரிக்கர்களோ பரதம் கற்க வருபவர்கள் சுரிதார்தான் அணிய வேண்டும் என டிரெஸ் கோட் வைத்திருக்கிறாராம். போலவே பரதத்தை புனிதமாக கருத வேண்டும் என்றும் புரிய வைக்கிறாராம்.

''அதற்கு காரணமிருக்கிறது. என்னுடைய குரு பத்மா சுப்பிரமணியம், நாட்டிய கலைஞர் மட்டு மல்ல. ஆராய்ச்சியாளரும் கூட. கோயில் சிற்பங்களி லுள்ள முகபாவங்கள் குறித்து ஆய்வு செய்து 108 கர்ணாக்களை கண்டறிந்திருக்கிறார். அவற்றை தெரிந்து கொள்ளும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது. பரதத்தை அளவுக்கு அதிகமாக நான் நேசிக்க இது வும் ஒரு காரணம்...'' என்று சிலிர்க்கும் பாலா தேவி, தன் குரு பத்மா சுப்பிரமணியம் கையால் 'பாரத்திய நிரித்திய சேவா மணி' பட்டம் பெற்றதை புனிதமாக நினைக்கிறார்.

''அதனாலேயே அனைவரும் பரதநாட்டியத்தை புரிந்து கொள்ள வேண்டும் என மெனக்கெடுகிறேன். பொதுவாக நாட்டியத்துக்கு ஏற்ப புரியும் அபிநயங் களும், பாடல் வரிகளும் சாதாரண ரசிகர்களுக்கு புரிவதில்லை. இந்தக் குறை நீங்கிவிட்டால் அனை வராலும் பரதத்தை ரசிக்க முடியும். எனவே நடனத்தை அழகாகவும் எளிமையாகவும் எல் லாராலும் புரிந்துக் கொள்ளும்படியாகவும் தொகுத்தே நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறேன். ஒவ்வொரு நாட்டிய நாடகத்தையும் எழுத்துப்பூர்வ மாக தயாரித்த பிறகே அரங்கேற்றுகிறோம்.

வடமொழியில் இருப்பதை தமிழில் மாற்றி அமைக்க முடியும். அதுபோலவே ஆங்கிலம், தெலுங்கு, இந்தி, மராத்தி என ஒவ்வொருவருக்கும் தகுந்தபடி மாற்றி அமைக்கிறோம். இதனால் எங்கள் நாட்டிய நாடகங்களுக்கு அதிக வரவேற்பு கிடைக்கிறது.

அமெரிக்காவில் வசித்தாலும், அங்கு ஆடினா லும், என்னுடைய கால்கள் ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதத்துக்காக காத்திருக்கும். காரணம், ஆண்டு தோறும் சென்னையில் நடக்கும் டிசம்பர் மாத உற்சவத்தில் பங்கு பெறுவேன். அதே போல் ஆகஸ்ட் மாதம் தஞ்சாவூர் கோயிலில் நடனமாடு வேன். அது என் கணவரின் சொந்த ஊர் என்பதால் அங்கு ஆடும்போது எனக்கு அளவில்லாத சந் தோஷம் ஏற்படும்...'' என்று சிரித்தவர் அனைத்து வகையான நடனங்களையும் விரும்பிப் பார்ப்பாராம்.

''ஒவ்வொன்றிலும் இருக்கும் முகபாவங்களை உன்னிப்பாக கவனிப்பேன். அதை எப்படி பரதத்தில் பயன்படுத்தலாம் என்று யோசிப்பேன். ஆனால், அதை அப்படியே கொண்டு வரமாட்டேன். காரணம், கதகளி, குச்சுபிடி... என ஒவ்வொரு நடனத்திற்கும் தனி ஸ்டைல் உண்டு. அவற்றை அப்படியே பரதத்தில் கொண்டு வந்தால், அது பரதமாக இருக்காது'' என்றவர் தீமேட்டிக் நடனம் பற்றி விவரித்தார்.

''நந்தனார் சரித்திரம், கிருஷ்ணார்ப்பணம் போன்றவற்றை நடனமாக கொண்டு வந்தேன். சபாவில் நடனமாக அரகேற்றம் செய்வது மட்டும் இல்லாமல் அதை டிவிடியில் பதிவும் செய்து வருகி றேன். கிருஷ்ணர் பகவத் கீதையில் சொன்ன உப தேசங்கள் பற்றி கடந்த ஆண்டு நடனமாடினேன். என்னுடைய அடுத்த புராஜக்ட் 'விஷ்வம்'. இதில் பாகவதம் மற்றும் உபநிஷத்தின் சாரங்களை கொண்டு நடனம் அமைத்திருக்கிறேன். கடவுள் எல்லா இடத்திலும் இருக்கிறார், அவர் எல்லார் மனதிலும் இருக்கிறார் என்பதுதான் இதன் கரு'' என்றார் பாலா தேவி.

**- ப்ரியா**

**படங்கள்: லோகநாதன்**

